**11-06-2019**

# பத்திரிக்கை செய்தி

## மே 2019 மாதத்தில் 45,494 பயணிகள் ஷேர் டாக்சி மற்றும் ஷேர் ஆட்டோ சேவையை பயன்படுத்தியுள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கடந்த 11.08.2018 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ இரயில் நிலையங்களில் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளுக்காக பல போக்குவரத்து இணைப்பு நடவடிக்கைகளை வழங்குவதற்கான முன்முற்சியை மேற்கொண்டு வருகின்றது.

ஏழு மெட்ரோ இரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ இணைப்பு சேவைகள் ரூ. 5/- கட்டணத்துடன் குறிப்பிடப்பட்ட பாதைகளில் இயங்குகின்றன.

அதேபோல் ஷேர் டாக்சி சேவைகள் ஆறு தேர்தெடுக்கப்பட்ட மெட்ரோ இரயில் நிலையங்களில் ரூ. **10/-** கட்டணத்துடன் **3** கிலோமீட்டர் தூரம் வரை இயங்கின்றன.

மே மாதத்தில் மேற்காணும் மெட்ரோ இரயில் நிலையங்களில் **45,494** பயணிகள் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி வசதிகளை பயன்படுத்தியுள்ளனர். இதில் **7288** பயணிகள் ஷேர் டாக்சி சேவையையும் **38,206** பயணிகள் ஷேர் ஆட்டோ சேவையையும் பயன்படுத்தியுள்ளனர்.

சுமார் **3,49,289** பயணிகள் இந்த ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவைகளை கடந்த **11** ஆகஸ்ட் 2018 இல் முதல் **31** மே 2019 வரை பயன்படுத்தி உள்ளனர்

**மே மாதம் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி பயன் படுத்திய பயணிகளின் எண்ணிக்கை**

**ஷேர் டாக்சி**

1. எழும்பூர் மெட்ரோ நிலையம் - 701
2. ஏஜி - டி.எம்.எஸ் - 1601
3. அண்ணா நகர் கிழக்கு - 855
4. கோயம்பேடு - 1732
5. ஆலந்தூர் - 1247
6. வடபழனி - 1152

-------------
7288
-------------

**ஷேர் ஆட்டோ**

1. கிண்டி - 11910
2. திருமங்கலம் - 7257
3. ஆலந்தூர் - 5283
4. சின்ன மலை - 4252
5. ஈக்காட்டுத்தாங்கல் - 4191
6. கோயம்பேடு - 2726
7. பரங்கிமலை - 2587

-------------
38,206
-------------